**21.01.2026.**

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம் **)**

விழுப்புரம்**.**

**SC.No.20/2019**

அ**.**சா**.22**

பெயர்**.** திரு**.**மைக்கேல் இருதயராஜ்

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**2**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **:- .**</u>

இந்த வழக்கில் புகாரே தாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். வாதியால் தாமதம் ஏற்பட்டுள்ளது. இறந்து போன நபர் காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற உதவி ஆய்வாளர் என்ற நிலையில், அவரது இறப்பில் புகார் அளிப்பதில் ஏன் காலதாமதம் ஏற்பட்டது என்பதற்கு புகாரை கொடுத்தவரிடமிருந்தும், யாரிடமும் விசாரணை செய்து வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். இறந்து போன அப்துல் ஜாபர் இறந்துவிட்டார் என்ற தகவலை தொலைபேசி மூலமோ அல்லது செல்போன் மூலமோ தெரிவிக்கப்படும் பட்சத்தில், அது குறித்து ஜெனரல் டைரியில் (GD) பதிவு செய்து விசாரிக்கலாம் என்றால் சரிதான். அச்சு முதல் தகவல் அறிக்கையில் 3 வது காலம் C பகுதியில் எந்தப் பதிவும் இல்லாமல், வெற்றிடமாக உள்ளது என்றால், சரிதான். அதுபோன்று ஏன் முக்கியமான பதிவு நிரப்பப்படாமல் அந்த இடம் வெற்றிடமாக உள்ளது என்பதற்கான காரணம் எதுவும் வழக்குகோப்புகளில்(CD File) ல் இல்லை. ஒரு நபர் காவல் துறையில் புகார் அளிக்கும்போது அது நேரடியாக புலன் கொள்ளக்கூடிய குற்றமாக இருந்தால் நாங்கள் அதை பதிவு செய்து அந்த முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை புகார் அளித்தவருக்கு, காலம் 14-ல் புகார் அளித்தவரிடம் கையெழுத்து பெற்று, அவரிடம் கொடுத்து விடுவோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் காலம் 14-ல்

புகார் அளித்தவரிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதிரி யார் என்று தெரியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி யார் என்று தெரியாத நிலையில் சம்பவ இடத்திற்கு மோப்பநாய், புகைப்படம் எடுக்கும் புகைப்பட நிபுணர்கள், கைரேகை நிபுணர்கள், ஆகியோரை அழைத்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் அது போன்று புகைப்பட நிபுணர்கள், கைரேகை நிபுணர்கள், மோப்பநாய் உதவி ஆகியவை பயன்படுத்தப்பட்டதற்கு உண்டான ஆவணங்கள் ஏதாவது உள்ளதா? என்றால், எதுவும் இல்லை. அதுபோன்ற உதவி பயன்படுத்தப்படவில்லை. பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் அந்த சம்பவம் நடந்த இடத்தில் ரத்தம் சிதறி கிடந்ததாக உள்ளது என்றால், சரிதான். அந்த இடத்தை புகைப்படம் எடுத்ததற்கான ஆவணம் எதையும் ஆய்வாளர் நீதிமன்றத்தில் போடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் புகைப்பட நிபுணர்கள், கைரேகை நிபுணர்கள்,மோப்ப நாய் உதவி, ஆகிய அனைத்தும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டதால் தான், அந்த உண்மைகள் அனைத்தும் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2 வரைபடங்களிலும் 28 போடப்பட்டு, 28 என்பது 27 ஆக தேதி மாற்றப்பட்டுள்ளது என்றால் திருத்தம் உள்ளது. வழக்கு கோப்புக்களில் தேதியை மாற்றும்போது அவ்வாறு மாற்றுபவர் சுருக்கொப்பம் செய்ய வேண்டும் என்றும், ஆனால் இந்த ஆவணங்களில் சுருக்கொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். பார்வை மகசரில் உள்ள கையெழுத்துக்கள் ஆய்வாளருடையது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 27/06/2018 தேதியில் தயாரிக்கப்பட்டதாக கூறப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள ஆய்வாளரின் கையெழுத்தும், அதேபோல் பார்வை மகசரில் உள்ள ஆய்வாளரின் கையெழுத்தும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. ஒரே கையெழுத்து தான். மேற்படி இரு ஆவணங்களிலும் உள்ள ஆய்வாளரின் கையெழுத்துக்கள் வெவ்வேறானவை என்பதை நிரூபிக்க நிபுணர் கருத்துரைக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை உள்ளதா? என்றால், எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. 30/06/2018 -ம் தேதி தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசர், 02/08/2018-ம் தேதி தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசர், 31/08/2018 -ம் தேதி தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசர், ஆகிய அனைத்து ஆவணங்களிலும் உள்ள ஆய்வாளரின் கையெழுத்துக்கள் ஒன்றுக்கொன்று வெவ்வேறானவை, மாறுபட்டுள்ளது என்றும், அவை ஆய்வாளரின் கையெழுத்துகளே அல்ல என்றும் சொன்னால், சரியல்ல. வழக்கில் பிரேத விசாரணை அறிக்கையை யார் கைப்பட எழுதினார்கள் என்று எனக்கு தெரியுமா? என்றால்,

எனக்கு ஆய்வாளரின் கையொப்பம் மட்டும்தான் தெரியும். அவரது ஹாண்ட் ரைட்டிங் நான் பார்க்கவில்லை. பிரேத விசாரணை அறிக்கையில் இறந்து போன அப்துல் ஜபார் என்பவரின் கைரேகை ஏதாவது உள்ளதா என்றால், இல்லை. இந்த பிரேத விசாரணை அறிக்கையில் காலம் எண்-9 ல் எதிரிகள் யார் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால், குறிப்பிட்டு எதிரிகள் பெயர் எதுவும் சொல்லப்படவில்லை. முன்விரோதம் உள்ளது என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. காலம் எண் - 11 ல் ஐயத்திற்குரியவர்கள் எவரேனும் உண்டெனில் அவரது விவரங்கள் தெரியவில்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் வைத்திருந்ததாக சொல்லப்படும் கைபேசி எண்ணை பற்றி எதிரிகளை கைது செய்யும் வரைக்கும், சாட்சிகளிடம் விசாரித்து, ஆய்வாளர் தெரிந்துகொண்டாரா? விசாரணை மேற்கொண்டுள்ளாரா? என்றால், கோப்புக்களில் போன் செய்ததாக உள்ளதே தவிர, கைபேசி எண் என்ன என்பது உள்ளது. அந்த தொலைபேசி எண்ணின் CDR (அழைப்புகளின் விவரம்) எதுவும் வாங்கியதாக கோப்புக்களில் இல்லை. சரிதான். இறந்து போன அப்துல் ஜப்பாருக்கு 2 மனைவிகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். மூத்த மனைவி ஜமீலா பிவிக்கு 4 மகன்கள் மற்றும் 1 மகள் என்றால் சரிதான். அப்துல் ஜப்பார் இறக்கும் வரையில் தனது இரண்டாவது மனைவி ரொக்கையா பீ என்பவரிடம் தான் வாழ்ந்தார் என்றால், அது போன்று கோப்புக்களில் எதுவும் இல்லை. ஆனால் திருக்கோவிலூரில் வாழ்ந்தார் என்று கோப்புக்களில் போடப்பட்டுள்ளது. 2 வது மனைவி ரொக்கையா பீ என்பவருக்கு தான் அப்துல் ஜப்பார் வீடு வாங்கி கொடுத்து அவருடன்தான் வசித்து வந்தார் என்றும், அது குறித்து அவருக்கும் மூத்த மனைவியின் பிள்ளைகளுக்கும் இடையே விரோதம் இருந்து வந்தது என்றும், அது இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றும், அது குறித்து தெரியவில்லை. கோப்புக்களை பார்த்துதான் கூற முடியும். 7 ஆண்டுகளுக்குள் தண்டிக்க வேண்டிய வழக்கு என்றால் தான், எதிரிகளுக்கு 41 A படி சம்மன் கொடுத்து விசாரிக்க வேண்டும் என்றும், அதற்கு மேல் தண்டிக்கக்கூடிய வழக்குகளை பொறுத்து சம்மன் கொடுத்து விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால், அது குறித்து ஆவணங்களை சரிபார்த்து கூறுகிறேன். இந்த வழக்கில் சம்பவ இடத்தில் கிடைத்த தலைமுடியை டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுப்பினார்களா என்றால், சந்தேகம் இருந்தால் டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கோப்புக்களில் உள்ளது. அவ்வாறு அனுப்பப்பட்டதா? என்று நான் கோப்புகளை பார்த்து தான் கூற முடியும். ஒரு தலைமுடியை டிஎன்ஏ பரிசோதனைக்கு அனுப்பினால்

அந்த தலைமுடி ஆணுக்குரியதா? அல்லது பெண்ணுக்குரியதா? அவர்களின் வயது என்ன? என்பதை கூற முடியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் முக்கிய அம்சங்களான மோப்பநாய் அறிக்கை, கைரேகை, கால் ரேகை குறித்த நிபுணர் அறிக்கை, தலை முடி குறித்த DNA அறிக்கை, புகைப்பட நிபுணரின் புகைப்படங்கள் ஆகிய முக்கிய ஆவணங்கள் அனைத்துமே வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. இறந்து போன அப்துல் ஜப்பாரின் குருதி வகை என்ன என்று எனது கோப்புக்களில் உள்ளதா? என்றால், குருதியியல் அறிக்கைக்கு அனுப்பியுள்ளார்கள். அதில் அப்துல் ஜப்பாரின் குருதி வகை (blood group)என்ன என்று குறிப்பிடப்படவில்லை. 3 எதிரிகளை 22/08/2018 தேதியில் 41 A நோட்டீஸ் கொடுத்து தான் வரவழைத்து விசாரித்து எதிரிகளாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கு முன்பு அந்த 3 எதிரிகளும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதை காண்பிக்க எந்தவிதமான வாக்குமூலங்களையும், ஆவணங்களையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்று சொன்னால், சரியல்ல. எதிரிகளின் Arrest intimation Form -ல், அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்திற்கு பிறகு அவர்களிடம் இருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக காலம் எண் - 8 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரிகள் மீது ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகள் மீது சுபாஷ் என்ற நபர் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்தது என்றும், 2014 ல் சம்பவம் நடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாக நடந்த பஞ்சாயத்தை வைத்து வேண்டுமென்று ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்துமே இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு, தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. அப்துல் ஜப்பார் ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர் என்பதால், அதை வைத்துக்கொண்டு பல கட்டப்பஞ்சாயத்தில் ஈடுபட்டார் என்றும், அதனால் அவருக்கு பல எதிரிகள் உள்ளனர் என்றும் சொன்னால், சரியல்ல. அவருடைய சொந்த குடும்பத்திலேயே அவருக்கு விரோதம் இருந்தது என்றும், அதேபோல் வேறு பல நபர்களுடன் முன்விரோதம் இருந்தது என்றும், ஆனால் அவர்களை குறித்து விசாரணை செய்யாமல், 3 எதிரிகள் தலித் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால், காவல் ஆய்வாளர் அவர்கள் மீது வழக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு முறையாக புலன் விசாரணை செய்யப்படாமல் எதிரிகள் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. **(**மேற்படி குறுக்கு விசாரணையை **1,4** எதிரிகள் தமதாக ஏற்றுக் கொண்டனர்**).**

மறு விசாரணை

இல்லை.